பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

15 08 2022 **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 76-ஆவது சுதந்திர தினத்தையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி தில்லி செங்கோட்டையில் தேசியக்கொடி ஏற்றிவைத்து உரையாற்றினார்.

2. சுதந்திரத்திற்காக பாடுபட்ட தலைவர்களின் தொலைநோக்கு பார்வையை நனவாக்க வேண்டும் என்று பிரதமர் தமது உரையில் கேட்டுக்கொண்டார்.

3. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வீர தீர செயல்களுக்கான விருதுகளை அறிவித்துள்ளார்.

4. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தேசியக்கொடி ஏற்றிவைத்தார்.

5. தமிழக அரசு ஊழியர்களுக்கு கடந்த ஜூலை ஒன்றாம் தேதிமுதல், அகவிலைப்படி 34 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது

---- இனி விரிவான செய்திகள்----

<<<<<<<>>>>>

நாட்டின் 76-ஆவது சுதந்திர தினம் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

தில்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து பிரதமர் திரு நரேந்திர மோடி சுதந்திர தின உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், மூவர்ண கொடி இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் அனைத்துப்பகுதிகளிலும் பெருமையோடும், மதிப்போடும் பறக்கவிடப்படுவதாக தெரிவித்தார்.

தேசப்பிதா மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், டாக்டர் அம்பேத்கர், வினாயக் தாமோதர் சாவர்கர் போன்ற தலைவர்கள் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டதை அவர் நினைவுகூர்ந்தார்.

அமிர்த பெருவிழாவை நாம் கொண்டாடிவரும் வேளையில், சுதந்திரத்திற்காக பாடுபட்ட தலைவர்களின் தொலைநோக்கு பார்வையை நனவாக்க வேண்டும் என்ற உறுதியுடன் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஜவஹர்லால் நேரு, ராம் மனோகர் லோஹியா, சர்தார் பட்டேல் போன்ற தலைவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்ததையும் பிரதமர் நினைவுகூர்ந்தார்.

பழங்குடியினத்தை சேர்ந்த பிர்சா முண்டா, தீரத் சிங், அல்லூரி, சீதாராம ராஜு போன்றவர்கள் சுதந்திரப்போராட்டத்தில் அரும்பணியாற்றியதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தின் அன்னையாக விளங்கும் இந்தியா, கடந்த 75 ஆண்டுகளில் பல சவால்களை கடந்து, வெற்றி நடை போடுவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

வேற்றுமையில் ஒற்றுமை எனும் வலிமையான கொள்கை பிடிப்புடனும், தேசப்பற்றுடனும் இணைந்து நிற்கும் இந்தியாவை யாரும் அசைத்து பார்க்க முடியாது என்றும் பிரதமர் தமது உரையில் கூறினார்.

புதிய இந்தியாவுக்கான வளர்ச்சிப் பாதையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிரதமர், பெண்கள், விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள், தலித் இன மக்கள் அனைவருக்கும் அதிகாரம் அளிக்கும் அரசாக இந்தியா விளங்க வேண்டும் என்ற தேசப்பிதாவின் தொலைநோக்கு பார்வையை மனதில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இல்லந்தோறும் தேசியக்கொடியை ஏற்றி, நாட்டின் ஒற்றுமைக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஒன்று திரண்ட இந்திய மக்களின் உணர்வை போற்றுவதாகவும் பிரதமர் கூறினார்.

வரும் 25 ஆண்டுகளில் சுதந்திர தின நூற்றாண்டை கொண்டாடவுள்ள நிலையில், புதிய இந்தியாவின் வளர்ச்சிக்காக 130 கோடி இந்திய மக்கள், மன உறுதியோடு தங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கோவிட் பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதில் இந்தியா வெற்றிகரமாக செயல்பட்டதை குறிப்பிட்ட பிரதமர், இதனால் ஏற்பட்ட பொருளாதார தாக்கத்திலிருந்து நாடு வெகு விரைவிலேயே மீண்டு வந்ததையும் சுட்டிக்காட்டினார்.

மருத்துவக்கல்வி கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்தை மக்கள் இயக்கமாக முன்நிறுத்தி செல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் பாதுகாப்பு தளவாட உற்பத்தியை கொண்டுவந்தது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக கூறினார்.

சுதந்திரப் போராட்டத்தின்போது எழுந்த சுதேசி இயக்கத்திற்கு நாம் புத்துயிர் ஊட்ட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், நாமும் நமது வருங்கால சந்ததியினரும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சுயசார்பு இந்தியா வெற்றிபெற சுதேசி இயக்கத்தை வலுப்பெற செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விண்வெளி பயணத்திட்டம் தொடங்கி, இயற்கை வேளாண்மை வரை அனைத்துத்துறைகளிலும் நாம் வளர்ச்சி பெற வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

நாட்டிலிருந்து ஊழலையும், குடும்ப அரசியலையும் முற்றிலுமாக ஒழித்து, அரசின் பயன்கள் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் நியாயமாக கிடைத்திட வேண்டும் என்றும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

வங்கிக்கணக்கில் நேரடியாக பணம் செலுத்தும் நடைமுறை, ஆதார், செல்போன் பயன்பாடு ஆகியவற்றின் உதவியால், இரண்டு லட்சம் கோடிக்கும் மேற்பட்ட கருப்புப்பணத்தை வெளிக்கொண்டுவர முடிந்ததாக பிரதமர் குறிப்பிட்டார்.

ஊழலில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளிவைத்து, திறமை மிக்கவர்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

திறமை மட்டும்தான் புதிய இந்தியாவின் அடித்தளமாக அமைந்துள்ளது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சுதந்திர தின உரையில் கூறினார்.

முன்னதாக, ராஜ்காட்டில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தி நினைவிடத்தில் பிரதமர் மரியாதை செலுத்தினார்.

மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் 76வது சுதந்திர தினம் தேசப்பற்றுடனும், எழுச்சியுடனும் கொண்டாப்பட்டு வருகிறது.

<<<<<<<>>>>>

76-வது சுதந்திர தினம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்திய வம்சாவளியினர் மற்றும் பல நாடுகளில் தங்கியுள்ள இந்திய மக்களும் இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில், தங்கள் வீடுகளில் தேசியக்கொடி ஏற்றினர்.

அங்கு செயல்பட்டுவரும் இந்திய தூதகரங்களில் மூவர்ண தேசியக்கொடி ஏற்றப்பட்டு, சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது.

<<<<<<<>>>>>

76-வது சுதந்திர தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வீர தீர செயல்களுக்கான விருதுகளை அறிவித்துள்ளார்.

ராணுவம் மற்றும் துணை ராணுவப் படைகளில் வீர, தீர செயல்கள் புரிந்தவர்களுக்கு வழங்கப்படும் நாட்டின் உயரிய விருதான கீர்த்தி சக்ரா, சவுரிய சக்ரா உள்ளிட்ட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கீர்த்தி சக்ரா விருது 3 பேருக்கும், சவுரிய சக்ரா விருது 13 பேருக்கும் வழங்கப்படுகிறது.

மேலும், 81 சேனா விருதுகள் உள்ளிட்ட 107 பேருக்கு விருதுகள் வழங்கப்படும் என்றும் குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

சுதந்திர தினத்தையொட்டி, புனித ஜார்ஜ் கோட்டையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தேசியக்கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்.

பின்னர் சுதந்திர தின உரையாற்றிய முதலமைச்சர், விடுதலை போராட்டத்தில் தமிழகத்தை சேர்ந்த எண்ணற்ற தலைவர்கள் தாங்களாகவே முன்வந்து ஈடுபடுத்திக் கொண்டதை குறிப்பிட்டார்.

தேசப்பிதா காந்தியடிகளின் அஹிம்சை பாதையில் வ உ சி, சுப்பிரமணியம் சிவா, செண்பகராமன் உள்ளிட்ட தலைவர்களின் தியாகத்தையும் அவர் நினைவுகூர்ந்தார்.

உப்பு சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம் என தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்ற ஐயா ஜமதக்னி, மூதறிஞர் ராஜாஜி ஆகியோரின் அரும்பணியையும் அவர் குறிப்பிட்டார்.

திருப்பூர் குமரன் விடுதலை போராட்டத்தில் இறுதி மூச்சு நிற்கும் வரை சுதந்திரக் கொடியை காத்து நின்றதன் பயனாகத்தான் நாம் விடுதலை காற்றை சுவாசித்துக்கொண்டிருக்கிறோம் என்று அவர் கூறினார்.

நாட்டின் விடுதலையின் பவளவிழவிற்கு சிறப்பு சேர்க்கும் வகையில் சில அறிவிப்புகளையம் முதலமைச்சர் வெளியிட்டார்.

சுதந்திரப்போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத்தொகை 18 ஆயிரம் ரூபாயிலிருந்து, 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவித்தார்.

குடும்ப ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அவர் அறிவித்தார்.

தமிழக அரசு பணியாளர்களுக்கு கடந்த ஜூலை ஒன்றாம் தேதிமுதல், அகவிலைப்படி 31 விழுக்காட்டிலிருந்து, 34 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

கடந்த ஓராண்டு காலத்தில் தமிழகம் பல துறைகளில் வளர்ச்சிப் பெற்றிருப்பதை சுட்டிக்காட்டிய முதலமைச்சர், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நல திட்டங்களையும் பட்டியலிட்டார்.

75 ஆண்டுகால விடுதலை இந்தியாவின் வரலாற்றை மேல்நோக்கி நகர்த்த அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமை உணர்வோடு பாடுபடுவோம் என்றும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தமது சுதந்திர தின உரையில் கூறினார்.

<<<<<<<>>>>>

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில், தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் முதலமைச்சர் திரு என். ரங்கசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

மாவட்ட தலைநகரங்களில் தேசியக் கொடியை, மாவட்ட ஆட்சியர்கள் ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சி அலுவலகங்களிலும் சுதந்திர தினம் சிறப்பாக கொண்டாப்பட்டு வருகிறது

மத்திய-மாநில அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலும் 76வது சுதந்திர தினம் உற்சகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள அகில இந்தியா வானொலி, தூர்தர்ஷனின் தென்மண்டல அலுவலகத்தில், அதன் கூடுதல் தலைமை இயக்குநர் திரு. ராமச்சந்திரன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

கூடுதல் பொறியியல் துறை தலைமை இயக்குனர் திரு தியாகராஜன் மற்றும் அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

75 ஆண்டு விடுதலை பெருவிழாவின் அடையாளமாக 75 வகையான மரங்கள் அலுவலக வளாகத்தில் நடப்பட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது

சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் துணை தலைமை இயக்குனர் திரு டி ராஜேந்திரன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்,

சென்னை விமான நிலையத்தில் தேசிய கொடியைக் விமான நிலைய இயக்குநர் திரு. சரத்குமார் ஏற்றி வைத்து மத்திய பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும், இன்று கிராமசபைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, நீலகிரி, ஈரோடு, கோவை, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வட தமிழக மாவட்டங்கள் மற்றும் மேற்குதொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

சென்னையில் நடைபெற்ற மூன்றாவது மாநில ரேங்கிங் டேபிள் டென்னிஸ் போட்டியின், ஆடவர் பிரிவில் வருணும், மகளிர் பிரிவில் தீபிகாவும் பட்டம் வென்றனர்.

ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் வருண், 11-5, 11-7, 6-11, 11-8, 11-5 என்ற கணக்கில் **SRMST** அணியின் அபினவ்-வை வென்றார்.

மகளிர் பிரிவு இறுதிப் போட்டியில் தீபிகா 11-5, 11-9, 9-11, 7-11, 11-3, 11-6 என்ற செட்கணக்கில் **ICF** அணியின் யாஷினியை வென்றார்.

<<<<<>>>>>